**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANYAKUMARI AT NAGERCOIL**

01.04.2024

E.A. 9/2022 in E.P. 15/2019

P.W.1 திருமதி. ஆன்றோ பெல்சி

**சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பில்)-**

நான் நீதிமன்றத்தில் என்ன மனு போட்டுள்ளேன் என்று தெரியுமா என்றால் தெரியும். நாங்கள் மனு சொத்தில் குடியிருக்கிறோம். அது எங்களுடையது என போட்டுள்ளோம். மனு சொத்து எந்த வில்லேஜ் என்றால் கோவளம் அகஸ்தீஸ்வரத்தில் உள்ளது. சர்வே எண். 512/2. என்னுடைய சொத்தின் விஸ்தீரணம் 3 சென்ட். மொத்த சொத்து எவ்வளவு என சரியாக தெரியாது. என்னுடைய 3 சென்ட் நிலத்தில் இருந்து என்னை வெளியேற்றக் கூடாது என சொல்லிதான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த இடம் 3 சென்ட்டா என்றால் நான் இருக்கும் இடம் 3 சென்ட். அந்த 3 சென்ட் நிலத்தை மனுப்பட்டிகையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது மனுவில் சொத்து விவரம் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு சரியாக தெரியாது. இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்நீதிமன்றத்தில் இருந்து அமீன், சர்வேயர் ஆகியோர் அந்த இடத்தை அடையாளம் பார்ப்பதற்காக வந்தார்கள் என்றால் ஆமாம். அது எந்த வருடம் என்றால் அது சரியாக ஞாபகம் இல்லை. ஊர்காரர்கள் அனைவரும் திரண்டு நீதிமன்றத்திலிருந்து வந்தவர்களையும், எதிர்மனுதாரர்கள் வழக்கறிஞர்களையும் சொத்துக்குள் விடாமல் தடுத்துவிட்டோம் என்றால் சொத்துக்கு சம்பந்தப்பட்டவர்கள் தடுத்தோம், ஊர்காரர்கள் யாரும் தடுக்கவில்லை. கன்னியாகுமரி காவல்

நிலையத்திலிருந்து காவலர்களை அழைத்திருந்தோமா என்றால் நாங்கள் அழைக்கவில்லை அவர்கள் வந்திருந்தார்கள். இந்த வழக்கு ஆரம்ப காலத்திலிருந்து நாங்களும், எங்கள் ஊர்காரர்களும், சர்ச்லிருந்தவர்களும் கவனித்து கொண்டிருந்தோம் என்றாலும் அதன் பெயரில்தான் நீதிமன்றத்திலிருந்து வந்தபோது முன் கூட்டியே போலீசுக்கும் தகவல் கொடுத்து கூடியிருந்தோம் என்றால் சரியல்ல. அமீன் வந்தபிறகு தான் இந்த வழக்கு இருந்தது என்று எங்களுக்கு தெரியும். 17.03.2022 ஆம் தேதி அமீனும், அவர்களுக்கு உதவியாக இருந்த மற்றவர்களும் அந்த இடத்திற்கு வருவதற்கு முன்பாகவே நாங்கள் அனைவரும் அந்த இடத்தில் கூடியிருந்தோம் என்றால் சரியல்ல. அமீன் வந்த பிறகு தான் இந்த வழக்கு விவரம் தெரியும் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ளதாக சொல்லும் 3 சென்ட் நிலத்தை நான் விலைக்கு வாங்க வில்லை என்றால் சரிதான். கோவிலிருந்து நன்கொடையாக தந்தார்கள். 2007 ல் ஒரு நன்கொடை பத்திரம் யார் எழுதி கொடுத்தது என்றால் கோவளம் R.C. சர்ச் பாஸ்டர் ஜஸ்டஸ் எழுதி கொடுத்தார். அவ்வாறு எழுதி வாங்குவதற்கு முன்பு அவர் பெயரில் இருந்த ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. சுனாமிக்கு முன்னர் பட்டிகை சொத்து எந்த கட்டிடமும் இல்லாமல் காலி நிலமாக இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதிக்கு 91.88 சென்ட் உரிமை உள்ளது என்றால் அது அவர்கள்தான் சொல்கிறார்கள். அதே போல மற்றொரு 91.88 சென்ட் சர் ஜாண் ரியாலிட்டிஸ் பிரைவேட் லிமிடெட்க்கு சொந்தமானது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கின் வாதி கேசவபட்டுக்கு கிழக்கு பகுதியும், சர் ஜாண் ரியாலிட்டிஸ் பிரைவேட் லிமிடெட் சொந்தமானது என்றால் அது குறித்து தெரியாது. அவ்வாறு சர் ஜாண் ரியாலிட்டிஸ் பிரைவேட் லிமிடெட் க்கு சொந்தமான மேற்கு பக்கத்தில் உள்ள 91.88 சென்ட் நிலத்தில்தான் குடிசை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. கிழக்கு பக்கத்தில்தான் நாங்கள் இருக்கிறோம் குடிசை இல்லை வீடு கட்டியுள்ளோம். நானும், என்னை போன்று மனு தாக்கல் செய்துள்ள மற்றவர்களும் கிழக்கு

பக்கத்தில் உள்ள 91.88 சென்ட் நிலத்தில் வீடு கட்டியுள்ளோம் என மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்திலோ, தற்போது தாக்கல் செய்துள்ள சாட்சிய வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. இந்த மனுக்களை தயார் செய்து கொடுத்தது தற்போதைய அரசு வழக்கறிஞர் என்றால் எங்களுக்கு தயார் செய்து கொடுத்தது முத்துகருப்பபிள்ளை. போலீஸ் உதவி வேண்டும் என்பதற்காக அரசு வழக்கறிஞர் மூலம் சென்றுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த பட்டிகை சொத்து குறித்து பாஸ்டர் ஜஸ்டஸ் என்பவர் பெயரில் உள்ள கிரய ஆவணம் செல்லாது என நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் அமீன் வந்த பிறகு தெரிந்து கொண்டேன். பாஸ்டர் ஜஸ்டஸ் என்பவருக்கு அந்த கிரய பத்திரத்தை எழுதி கொடுத்த நபர் பெயரில் உள்ள அதிகாரப் பத்திரமும் செல்லாது என இந்நீதிமன்றம் உத்தரவு செய்துள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எல்லா பிரச்சினையும் அமீன் வந்தபிறகு தெரிந்து கொண்டேன். பாஸ்டர் ஜஸ்டஸ் திறமையான நபர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எத்தனை வருடம் எங்கள் சர்ச்சில் இருந்தார் என்றால் 5 வருடங்கள் இருந்தார். பாஸ்டர் ஜஸ்டஸ் என்பவர் பெயரில் கேசவபட் மோசடியான ஆவணங்கள் தயார் செய்தார் என போலீசில் புகார் கொடுத்து, அது பூகம்பமாக வெடித்து பத்திரிக்கைகளில் அது குறித்து செய்தி வந்தது என்றால் சரிதான். போலீசார் பாஸ்டர் ஜஸ்டஸ் மீது நடவடிக்கை எதுவும் எடுத்தார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்நீதிமன்றத்தில் டாக்டர் கேசவபட் வாதியாக பாஸ்டர் ஜஸ்டஸ் மீதும் அவர் நன்கொடையாக ஆவணம் எழுதிகொடுத்த நபர்களின் பிரதிநிதியாகவும், அவர் மீது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் பாஸ்டர் ஜஸ்டஸ் வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த வக்காலத்து இதற்கு முன்னர் அரசு வழக்கறிஞராக இருந்த ஞானசேகர் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த வழக்கில் ஜஸ்டஸ் எதிருரை தாக்கல் செய்யததால் 27.06.2018 அன்று அந்த

வழக்கு அவருக்கு எதிராகவும், அவர் பிரதிநிதி படுத்திய நபர்களுக்கு எதிராகவும் தீர்ப்பானது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த நீதிமன்றத்தால் ஜஸ்டஸ் என்பவருக்கு எழுதப் பட்ட கிரய ஆவணமும் அவருக்கு கிரயம் எழுதிய நபர் பெயரில் உள்ள அதிகாரப் பத்திரமும் செல்லாது என உத்தரவிடப்பட்டதால் அதன் அடிப்படையில் மனுதாரர்களாகிய எங்கள் 7 பேருக்கு எழுதப்பட்ட இஷ்டதானப்பத்திரமும் செல்லாது என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்திலிருந்து வந்த அமீனை தடுத்து நிறுத்துவதற்கோ, அவர் அரசுப் பணியை செய்ய விடாமல் தடுப்பதற்கோ, எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அவருடைய பத்திரமே செல்லாததால் எங்களுடைய பத்திரமும் செல்லாது என்பது எங்களுக்கு தற்போது தெரியும் என்றால் அதனால்தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம். இந்த மனுவை தாக்கல் செய்யும் போது இந்த வழக்கில் கேசவபட் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களையும் பார்த்தோமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் உள்ள பங்கு பேரவையினர் பொறுப்பு எடுத்து செய்கிறார்கள் அவர்கள் பார்த்திருப்பார்கள். இந்த மனுக்கான ஏற்பாடு அனைத்தும் பங்கு பேரவையினர்தான் செய்தார்களா என்றால் நாங்களும் செய்தோம் அவர்களும் செய்தார்கள். இந்த பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட சங்கதிகள் யார் சொல்லியது என்றால் நாங்கள் வழக்கறிஞரை பார்த்துச் சொன்னோம். இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆங்கிலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மற்ற மனுதாரர்கள் பார்த்திருப்பார்கள் அவர்களுக்கு தெரியும். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்ன படித்துள்ளேன் என்றால் B.Com., படித்துள்ளேன். மற்றவர்களுக்கு அந்த மனுவில் உள்ள விவரம் தெரியுமா என்று எனக்கு தெரியாது என்றாலும் அவர்களைத்தான் கேட்க வேண்டும் என்றாலும் சரிதான். இந்நீதிமன்றத்தில் டாக்டர் கேசவபட் வழக்கு தாக்கல் செய்யும் போது இரண்டாம் பிரதிவாதி ஜோசப் ஜஸ்ட்ஜ் தனக்காகவும், அகஸ்தீஸ்வரம் கிராம சர்வே எண். 512/2 ல் வசிக்கின்றவர்களின் பிரதிநிதித்துவ நிலையிலும், தனக்காகவும் தாவா சொத்தின் சட்ட

விரோத அனுபவத்தில் இருக்கின்ற எல்லா நபர்களுக்காகவும் என்று சொல்லி அசல் வழக்கு எண். 116/2014 ஐ தாக்கல் செய்து அதன் அடிப்படையில் தான் வழக்கு உத்தரவாகியுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மறுத்து ஜோசப் ஜஸ்டஸ் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள எல்லா விவரங்களும் சரியாக இருந்ததால் தான் அவர் எந்த எதிருரையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் தாக்கல் செய்துள்ள 7 இஷ்டதான ஆவணங்கள் அனைத்தும் செல்லாது என்றால் சரியல்ல. அவ்வாறு செல்லாத ஆவணங்களின் அடிப்படையில் பெற்றுள்ள நில வரி பெயர் மாற்றம், கட்டிட வரி பெயர் மாற்றம், மின்சார இணைப்பு மற்றும் தண்ணீர் வரி பெயர் மாற்றம் ஆகியவை எங்களுக்கு எந்த உரிமையும் கொடுக்காது என்றாலும் அதன் மூலம் நாங்கள் எந்த உரிமையும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. கேசவபட்டின் கிரய ஆவணம் அடிப்படையிலும், இந்த வழக்கின் தீர்ப்பாணையின் அடிப்படையிலும் மனுதாரர்களாகிய நாங்கள் 7 பேரும் பட்டிகைச் சொத்தில் சட்ட விரோதமாக நாங்கள் குடியிருப்பதாகவும் என்றால் சரியல்ல. அது எங்கள் சொத்துதான். வாதியின் சொத்துக்களில் சட்ட விரோதமாக இருந்து கொண்டு அவரின் உரிமையை ஆட்சேபிப்பதற்கு எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் அடிப்படையில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.